***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No.1187/2025 – P.W. 1 (LW1)***

| | |
|---|---|
| *Name* | ராஜராஜன் தலைமை காவலர்<br>மன்னார்குடி நகர காவல் நிலையம் |
| *Father/Husband's Name* | |
| *Village* | |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *38* |

**எதிரி ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 14.07.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் தற்போது மன்னார்குடி நகர காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன்.

கடந்த 16.05.2025 ம் தேதியன்று வடுவூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்தபோது உதவி ஆய்வாளர் திருவள்ளுவன் அவர்கள் தலைமையில் காவலர் ராஜேந்திரன் ஆகியோருடன் மதுவிலக்கு சம்பந்தமாக வடுவூர் காவல் சரகத்திற்கு உட்பட்ட வடுவூர் தென்பாதியில் மதுவிலக்கு ரோந்து கண்காணித்து வந்தபோது வடுவூர் தென்பாதி தெற்கு தெருவில் உள்ள வீட்டின் அருகில் பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்து கொண்ட பொய்யாமொழி, வயது 34, த/பெ. கணேசன், வடுவூர் சாத்தனூர் என்பவர் பொது இடத்தில் வைத்து மது அருந்தியவரை போலீசாராகிய நாங்கள் கண்டித்து கேளாதவரை குற்றக்காரணம் கூறி 18.00 மணிக்கு கைது செய்து அவரிடம் இருந்த 180ml moniter brandy 1 பாட்டிலை பொது மக்கள் யாரும் சாட்சியாக இருக்க முன்வராததால் போலீசாராகிய எங்கள் முன்னிலையில் 18.15 மணிக்கு கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினோம். **மேற்படி கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1 வது கையொப்பம் அசா.ஆ.1 ஆக குறியீடு**

**செய்யப்படுகிறது**. அதே சாட்சிகள் முன்னிலையில் ஆய்வாளர் அவர்களின் உத்தரவின் பேரில் சம்பவ இடத்திலேயே 18.30 மணிக்கு அழிப்பு மகசர் தயார் செய்து பாதுகாப்பாக அழித்தோம். **மேற்படி அழிப்பு மகசரில் உள்ள 1 வது கையொப்பம் அசா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் 19.00 மணிக்கு எதிரியுடன் நிலையம் வந்து உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்ய உதவியாக இருந்தோம்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி பொய்யாமொழி வீடு அமைந்துள்ள பகுதி அருகருகே வீடுகள் உள்ள குடியிருப்பு பகுதி என்றால் சரிதான். நான் எதிரியை எந்த இடத்தில் வைத்து பார்த்தேன் என்றால் பொய்யாமொழியின் வீட்டில் இருந்து 10 மீட்டர் தள்ளி பார்த்தேன். அன்றையதினம் காவல் நிலையத்தில் நான் என்ன பணியில் இருந்தேன் என்றால் மதுவிலக்கு ரோந்து பணியில் இருந்தேன். அன்றையதினம் காவல் நிலையத்தில் என்ன பணியில் இருந்ததை Duty register பார்த்தால் தெரியும் என்றால் சரிதான். எந்த இடத்தில் எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லும் தடயப்பொருளை எந்த இடத்தில் இருந்து கைப்பற்றினோம் என்றால் எதிரி வீட்டில் இருந்து 10 மீட்டர் தூரத்தில் உள்ள மெயின் ரோட்டில் வடுவூர் தென்பாதி சாத்தனூர் ரோட்டில்.

எதிரி வைத்திருந்த தடயப்பொருளில் இருந்த இராசாயன பகுப்பாய்விற்கு மாதிரி ஏதேனும் எடுக்கப்பட்டதா என்றால் இல்லை. மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் வயலும், வீடும் மட்டும் தான் உள்ளது.

நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எதிரியிடம் இருந்து எந்த தடயப்பொருளும் கைப்பற்றவில்லை என்றாலும், உதவி ஆய்வாளர் வேண்டுக்கோளுக்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அருகில் உள்ள வீட்டில் உள்ளவர்களிடம் விசாரணை செய்தோமா என்றால் செய்யவில்லை. எதிரிக்கு எதிராக போடப்பட்ட பொய் வழக்கு என்று சொன்னால் சரியல்ல.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi